நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தை வலுவாக நடைமுறைப்படுத்துவதற்கான மண்டல அளவிலான தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் மதுரை ஆகிய மண்டல அளவிலான திறன் வளர்ச்சி பயிற்சி கூட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் தலைமையில் சமூக பாதுகாப்புத் துறை இயக்குனர் அமர்குஷ்வாஹா, மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன், துணை மேயர் ராஜு, தூத்துக்குடி மாவட்ட காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் உன்னிகிருஷ்ணன் (சைபர் கிரைம்) வழக்குகள் விவரங்கள் குறித்த துணை இயக்குனர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கோடைகாலத்தில் மின்சார உள்கட்டமைப்பு

சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்!

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 11- டெல்லியில் கோடைக்கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, கோடைகாலத்தில் மின்சார உள்கட்டமைப்பு சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என மாநிலங்களவையில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி வலியுறுத்தி உள்ளார்.

மாநில டிஸ்காம்கள் பெரும் சவால்களை எதிர் கொள்கின்றன. குறிப்பாக கோடைக்கால தேவை அதிகமாக உள்ள காலத்தில், மின்சார உள்கட்டமைப்புக்கு, குறிப்பாக மின்மாற்றிகள் பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. ஆகையால் உள்கட்டமைப்பு சேதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க அமைச்சகம் பரிசீலிக்கிறதா? அவ்வாறு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு எவ்வளவு ? என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி எழுப்பி உள்ளார்.

இதற்கு பதிலளித்து பேசிய மின்சாரம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஆர்.கே.சிங், அதிக கோடை கால தேவையின் போது, காற்றுச்சீரமைத்தல் மற்றும் குளிரூட்டும் சுமைகளின் அதிகரித்த பயன்பாடு காரணமாக டிஸ்காம்கள் அதிகமாக மின் தேவையைக் காண்கின்றன. டிஸ்டிபியூஷன் டிரான்ஸ்ஃபார்மர்கள் (DT) போன்ற முக்கியமான விநியோக உள்கட்டமைப்புகளான கேபிள்கள் சில நேரங்களில் அதிக சுமைகளை அடைகின்றன மற்றும் அதிக வெப்பத்தால் தோல்வியடைகின்றன, இதனால் மின் தடைகள் மற்றும் மின்சார உள்கட்டமைப்பிற்கு சேதம் ஏற்படுகிறது. இச்சமயத்தில் பழமையான மின்மாற்றிகள், கேபிள்கள் மற்றும் பிற விநியோக உபகரணங்களில் சேதம் அதிகமாக இருக்கும்.

துல்லியமான தேவை முன்னறிவிப்புகளின் அடிப்படையில் தங்கள் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் ஒட்டுமொத்த செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் டிஸ்காம்கள் முதலீடு செய்ய உச்ச சுமை மேலாண்மை தேவைப்படுகிறது.

தீன் தயாள் உபாத்யாயா கிராம் ஜோதி யோஜனா (DDUGJY) போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு மூலம் டிஸ்காம்களில் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்மற்றும்உருவாக்குதல் ஆகியவற்றை இந்திய அரசு எளிதாக்கியுள்ளது. கிராமப்புற ங்களில் துணை பரிமாற்றம் மற்றும் விநியோக உள்கட்டமைப்புகளான ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் (IPDS), நகர்ப்புறங்களில் துணைப் பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பை வலுப்படுத்துவது மின்சார விநியோகத்தில் முக்கிய நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. நாட்டின் விநியோக முறையை வலுப்படுத்த ஒட்டு மொத்தமாக ரூ.1.85 லட்சம் கோடி செலவிடப்பட்டது. மாநில வாரியாக விவ ரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், இந்திய அரசு, நிதி ரீதியாக நிலையான மற்றும் செயல்பாட்டுத் திறனுள்ள விநியோகத் துறையின் மூலம் நுகர்வோருக்கு மின்சார விநியோகத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தை (RDSS) தொடங்கியுள்ளது. இத்திட்டம் ரூ. 3,03,758 கோடி மற்றும் மொத்த பட்ஜெட் ஆதரவு கடந்த 2021 - 22 முதல் 2025 - 26 நிதியாண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் இந்திய அரசிடமிருந்து ரூ. 97,631 கோடி மதிப்பில் நெட்வொர்க் வலுப்படுத்துதல் மற்றும் கணினி ஆட்டோமேஷன் உள்ளிட்ட விநியோக வலையமைப்பை மேம்படுத்தவும், முதலீடுகள் மூலம் விநியோகத் துறையில் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது. டிஸ்டிபியூஷன்டிரான்ஸ்ஃபார்மர்கள் (DT) பெருக்குதல், புதிய துணை மின்நிலையங்களை உருவாக்குதல், துணை மின்நிலையங்களை மேம்படுத்துதல், HVDS, வேளாண்மை ஊட்டப் பிரிப்பு, ரிங் மெயின்கள் வழங்கல் அமைப்புகள் (RMUs), மின்கடத்திகளை மேம்படுத்துதல், கேபிளிங் பணிகள் போன்றவை மாநில டிஸ்காம்களில் விநியோக உள்கட்டமைப்புப் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்றார்.

புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ. 5875 கோடி. அதில் அரசு அனுமதித்துள்ள தொகை ரூ. 2758 கோடி, ஆனால் ஒன்றிய அரசு ரூ. 3070 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது அதே போல் தமிழ்நாடு ஸ்மார்ட் மீட்டர் திட்ட த்திற்கு ஆகும் தொகை ரூ. 19,235.36 கோடி. அதில் அரசு அனுமதிக்கப்பட்ட செலவு உள்கட்டமைப்பு பணிகள் ரூ. 9,066.27 கோடி. ஸ்மார்ட் டுக்கான பட்ஜெட் ஆதரவு அளவீட்டு பணிகளுக்கு ரூ. 3,398.45 கோடி, பட்ஜெட் ஆதரவு உள்கட்டமைப்பு பணிகள் ரூ. 5,439.76 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

வேலூர் மாவட்ட கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள்

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

மாவட்ட செயலாளர் - ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிக்கை!

வேலூர், ஆக. 11 - வேலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவீர் என வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின்மூலமாகபின்வருமாறு தெரிவித்துள்ளார்.

01.01.2024ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கணக்கிட்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2024க்கு முன் திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக வாக்காளர்களை சரிபார்க்க அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்குசாவடி நிலை அலுவலர்களால் (BLA1) வீட்டுக்கு வீடு நேரில் வந்து சரிபார்ப்பு பணி கடந்த 21.07.2023 முதல் மேற்கொள்ளபட்டு 21.08.2023 வரை இப்பணி நடைபெறுகிறது. இவ்வாறு நடைபெறும்போது கீழே குறிப்பிடபட்டுள்ள

விவரங்கள் குறித்து சரிபார்க்கபடும்.

1. வாக்குசாவடி அலுவலர்கள் (BLA1) ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் வந்து வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களின் விவரங்களையும் சரிபார்பார்கள்.

2. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்பும் தகுதியான பொதுமக்கள் அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், முகவரி மாற்றும், ஆதார் எண் இணைத்தல், இட மாற்றம் செய்ய விரும்பும் வாக்காளர்கள் வீடு தேடி வரும் அலுவலர்கள் மூலமாக செய்து கொள்ளலாம்.

3. 01.10.2023 அன்று 18 வயது நிரம்பியவர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை சேர்க்க விண்ணபிக்கலாம். எனவே இப்பணியினை மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட,வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் வாக்குசாவடி நிலை முகவர்கள் BLA2 ஆகியோர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

பாகமுகவர்கள் BLA -2 உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. அறிக்கை!

தேனி, ஆக. 11- தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

இராமநாதபுரத்தில் ஆகஸ்ட் 17ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றும் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பாக, தேனி தெற்கு மாவட்ட வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழகச் செயலாளரான எனது தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெற

வுள்ளது.

ஒன்றியம்/நகரம்/நாள்/நேரம்/இடம்

ஆண்டிபட்டி கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியம் - 12.08.2023 காலை 9.00 மணி - ஒன்றியக் கழக அலுவலகம், ஆண்டிப்பட்டி.

கடமலை - மயிலை வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியம் - 12.08.2023 காலை 11.00 மணி - பத்ரகாளியம்மன் கோவில் கலையரங்கம் கடமலைக் குண்டு.

கூடலூர் நகரம்/கம்பம் ஒன்றியம் (ஆண்டிப்பட்டி தொகுதி) - 12.08.2023 மாலை 4.00 மணி - கே.எஸ். மஹால் பேருந்து நிலையம், கூடலூர்

சின்னமனூர் நகரம்/ சின்னமனூர் கிழக்கு ஒன்றியம் - 13.08.2023 காலை 9.00 மணி - சி.ஆர்.மஹால் சின்னமனூர்

உத்தமபாளையம் கிழக்குமற்றும் மேற்கு ஒன்றியம் - 13.08.2023 காலை 11.00 மணி - விஜயலட்சுமி மஹால் உத்தமபாளையம்.

கம்பம் வடக்கு, கம்பம் தெற்கு நகரம் மற்றும் கம்பம் ஒன்றியம் (கம்பம் தொகுதி) -13.08.2023 மாலை 4.00 மணி - சி.என்.ஆர். மீட்டிங் ஹால், கம்பம்.

இந்நிகழ்ச்சியில் அந்த அந்த பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், சார்பு அணியின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்டம், பூதிபுரம் பேரூர் செயலாளர் பேரூராட்சி சேர்மன் கவியரசு ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பூதிபுரம் பேரூராட்சியில் மாநில அளவிலான சிலம்பு போட்டி வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் பரிசு வழங்கினார். உடன் சரவணகுமார் எம்எல்ஏ கிழக்கு ஒன்றிய செயலாளர் அயப்பன், பேரூராட்சி துணைத் தலைவர் பொன்னையன்மார்க்கையன்கோட்டை பேரூர் செயலாளர் ஓ எ முருகன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அரியானா வன்முறை: 1208 கட்டிடங்கள் இடிப்பு!

சண்டிகர், ஆக. 11 – அரியானாவில் நூஹ் பகுதியில் கடந்த 31ந் தேதி கலவரம் ஏற்பட்டது. இந்த கலவரம் பக்கத்து மாவட்டங்களுக்கும் பரவிய நிலையில் 6 பேர் கொல்லப்பட்டனர்.கலவரத்தின்போது கைதுசெய்யப்பட்டவர்களிடம்நடத்தப்பட்டவிசாரணையில்பல்வேறுதகவல்கள் கிடைத்தன.

இதைத்தொடர்ந்து கலவரக்காரர்கள் மற்றும் வன்முறையை துண்டியவர்களுக்கு சொந்தமான கட்டிடங்களை இடிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது.அதன்படிவன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு சொந்தமான கட்டிடங்களை இடிக்கும் பணி நடந்து வருகிறது. நூஹ் மாவட்டத்திற்கு உட்பட்ட11நகரங்கள்மற்றும்கிராமங்களில் இதுவரை 1,208 கட்டிடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

முத்தமிழர் மூச்சொலியே! முரசொலியே! வாழியவே!

கையெழுத்துப் பிரதியாய்
கருவாகித் தமிழர்தம்
மெய்யெழுத்தாய், உயிரெழுத்தாய்,
மேவும்உயிர் மெய்யெழுத்தாய்,
வையத் தமிழர்நிலை
மாற்றவந்த தலையெழுத்தாய்
உய்யும்எங்கள் வாழ்வுக்கே
உணர்வளித்த விழுமியமே!

ஏற்றியுனை மூட்டை கட்டி
எழில்முதுகில் சுமந்துவர,
காற்றடித்து மரப்பாலம்
கவிழ்ந்திட "ஓடம்போக்கி"
ஆற்றினிலே கலைஞருடன்,
அவர்நண்பர் தென்னனுடன்
சேற்றில் விழுந்தெழுந்த
செல்வமே! நித்திலமே!

மாணுயர்ந்த செந்தமிழர்
மரபுகளை உலகுக்குக்
காணுக எனக்காட்டும்
கருத்துமணிப் பெட்டகமே!
நாணத் தகும்அந்த
"நால்வருணப்" பிற்போக்கை
ஆணிவே ருடன்கிள்ளி
அறுத்தஅறி வாயுதமே!

முரட்டுப் பழமைகளின்
மூட நம்பிக்கை
இருட்டைக் கிழித்தெறிய
எழுந்துவந்த ஒளிக்கதிரே!
மருட்டும் மதவாத
மடமைகளின் கொடுமைகளைப்
புரட்டித் தகர்த்தெறிந்து
பொசுக்கவந்த கனற்பிழம்பே!

நாடு,மொழி, கலாச்சார,
நாகரிகம், பண்பாட்டைப்
பாடுதமிழ்ப் பாவியமே!
பைந்தமிழர் உள்ளமெலாம்
ஊடுருவிப் பதிந்ததமிழ்
ஓவியமே! எந்தமிழர்
நீடுபுகழ் வரலாற்றை
நினைவூட்டும் காவியமே!

ஒழிக!வெனும் ஒடுக்குமுறை!
உருவற்றுத் தடயமின்றி
அழிக!வெனும் அடக்குமுறை !
அத்தனைக்கும் ஈடுதந்தே
எழும்"எண்பத் திரண்டாண்டு"
எதிர்நீச்சல் போட்டுவரும்
கழகத்தின் கேடயமே!
களமறவர் போர்வாளே!

ஈர்த்திழுத்தே இளைஞர்களின்
இதயத்தில் தமிழுணர்ச்சி
சேர்த்துப் பெருகவைத்த
செயலூக்க நிலைக்களமே!
ஆர்த்து மொழிப்போரில்
அணிவகுத்த வீரருக்கு
வார்த்துப் படைக்கலன்கள்
வடித்தளித்த உலைக்களமே!

சொத்தெழுதி வைத்திருக்கும்
பத்திரம்போல், எம்நெஞ்சில்
பத்திரமாய் வாழ்கின்ற
சித்திரமே! ஆருயிரே!
கொத்துமலர்ச் சிந்தனைகள்
கொழிக்கின்ற பூக்காடே!
"முத்துவிழா" வும்கடந்து
முன்னேறும் பொன்னேடே!

தித்திக்கும் தமிழுக்கோர்
தீங்கென்றால் மறுநொடியே
எத்திக்கும் கேட்கும்
இடியின் எதிரொலியே!
முத்தமிழர்க் கென்றும் உயிர்
மூச்சொலியே! பேச்சொலியே!
தத்துவத்தின் அடைமொழியே!
தன்மானச் சுடரொளியே!

மலைபோலும் எதிர்ப்புகளை
மணல்போலும் தூளாக்கிக்
கலைஞரின் இலட்சியக்
கனவுகளை நனவாக்கும்
தலைவர்எங்கள் " தளபதி"யைத்
தமிழ்நாட்டின் முதல்வராய்
நிலைநிறுத்தும் களத்தினிலே
நிமிர்ந்துநின்ற அறிவொளியே!

சாத்திரச் சடங்குகளில்
சாதிகளில் வீழ்ந்துழன்ற
மாத்தமிழர்! துயில் கலைத்து
மண்டியவல் லிருள்தொலைத்துப்
பூத்தவிடி வெள்ளியெனப்
புகழ்த்தலைவர் கலைஞருக்கு
"மூத்தபிள்ளை" யாகவந்த
முரசொலியே! வாழியவே!!

- கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
விழுப்புரம் கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 25 / 2023-24 / தவஅ / நாள்: 07.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், திட்டம் சாராப் பணிகள் 2023-24 -ன் கீழ் விழுப்புரம், கடலூர், விருத்தாசலம், அரியலூர் மற்றும் பெரம்பலூர் (நெ), க(ம)ப, கோட்டங்களில் முறையே **(VPM-076-079, 80-83, 84-86, 87-89 & 90-91) பதினாறு பணிகளுக்கு இணையவழியில்** ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **30.08.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **14.08.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப வட்டம், விழுப்புரம்

செ.ம.தொ.இ./4367/ஒப்பந்தப்புள்ளி/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWM/ Mech) (பொ) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1011/2023
கடற்கரை மணற் பகுதியை சலித்து சுத்தப்படுத்தும் பணிக்கென 2 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயக்கப்படும் மணலை சலித்து குப்பை மற்றும் கழிவுகளை அகற்றும் இயந்திரங்கள் 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி கொள்முதல் செய்தல்
முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி
ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **18.09.2023** பிற்பகல் **3.00,** மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **19.09.2023** பிற்பகல் **3.30** மணி
மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 4429 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (இ/தி.க.மே) (பொ)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்